| S–5621 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA1C1 |

## B.A. DEGREE EXAMINATION, APRIL 2025

### First Semester

### தமிழ்

### இக்கால இலக்கியம்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு சொல்/தொடரில் விடையளிக்க.

1. பாரதிதாசன் இன்பத்தில் குதிக்கும் நாளாக எதனைக் குறிப்பிடுகிறார்?

2. கவியரசு முடியரசனார் பற்றிக் குறிப்பு வரைக.

3. செல்லம்மாவின் கணவர் பெயர் என்ன? அவர் செய்து வந்த வேலை என்ன?

4. மரப்பாச்சி கதையில் அனுவின் பண்புகளை எழுதுக.

5. அளம் நாவலின் கதை மாந்தர்களைக் குறிப்பிடுக.

6. அளம் நாவலின் கதைக்களம் எது?

7. கமலவேலன் படைப்புகள் குறித்து எழுதுக.

8. அழுக்குப்படாத அழகு நாடகத்தின் கதைத் தலைவியின் பண்புகள் யாவை?

9. உலகம் முழுக்க அறிந்த ஒரு நபராக ஏ.கே. செட்டியார் யாரைக் குறிப்பிடுகிறார்? ஏன்?

10. காந்தி இயக்கத்தை டிரேஸி எதற்காகப் பாராட்டினார்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளிக்க.

11. (அ) கதிரவன் வரும் அழகை வாணிதாசன் எங்ஙனம் விவரிக்கிறார்?

(அல்லது)

(ஆ) 'வெளிச்சம் வெளியே இல்லை' கவிதை உணர்த்தும் பாடுபொருளை ஆராய்க.

12. (அ) 'அக்கினிப் பிரவேசம்' சிறுகதை உணர்த்தும் மனித மனவெளியை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'வாழ்க்கை நெருப்பு' சிறுகதையின் கட்டாரியின் மனநிலை குறித்து விவரிக்க.

13. (அ) உப்பளத் தொழிலாளர்களின் நிலைகுறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ச. தமிழ்ச் செல்வன் படைப்பாக்கம் பற்றி எழுதுக.

14. (அ) நாடகக் கதைக்களத் தேர்வு மற்றும் விதம் குறித்து விவரி.

(அல்லது)

(ஆ) கமலவேலன் நாடகத்தின் தனிச்சிறப்புகளை விளக்குக.

15. (அ) லண்டன் நகரின் சிறப்பு குறித்து ஏ.கே.யின் குறிப்புகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஏ.கே. செட்டியார் அமெரிக்க வானொலியில் ஆற்றிய உரைகுறித்து திறனாய்க.

## பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் விரிவான விடையளிக்க.

16. பாரதி கண்ட மானுட சமூகம் குறித்துத் திறனாய்க.

17. கி.ரா.வின் நடையியல் குறித்து ஆராய்க.

18. 'அளம்' நாவல் உணர்த்தும் உப்பளத் தொழிலாளர்களின் வாழ்வியலை எடுத்துரைக்க.

19. கமலவேலன் நாடகங்களில் வெளிப்படும் சமூக மாற்றத்தை ஆராய்க.

20. உலகம் சுற்றிய தமிழரின் பயணக்குறிப்புகளை விவரிக்க.

| S–5622 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA1C2 |

# B.A. DEGREE EXAMINATION, APRIL 2025

## First Semester

## தமிழ்

## தமிழக வரலாறும் பண்பாடும்

## (CBCS – 2023 onwards)

Time : 3 Hours                                                   Maximum : 75 Marks

### பகுதி அ                                   $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு சொல்/தொடரில் விடையளிக்க.

1. தமிழகக் கல்வெட்டுகளில் மிகப் பெரியது எங்கு கண்டெடுக்கப் பெற்றது?

2. சங்க காலத்தில் 'கண்ணுள் வினைஞர்' எனப் போற்றப்பட்டவர் யார்? சான்று தருக.

3. தமிழகத்தின் பழைய கற்கால கருவிகள் எவை?

4. உப்புக் கண்டத்தின் சங்க காலப் பெயர் என்ன?விளக்குக.

5. காஞ்சியை களப்பிரரிடமிருந்து மீட்ட பல்லவ மன்னன் யார்? காஞ்சியின் சிறப்பு யாது?

6. பல்லவ இலச்சளைகளில் பொறிக்கப்பட்ட உருவம் என்ன?

7. சோழர்கால மாதர் மருத்துவம் குறித்து எழுது.

8. திருமலை நாயக்கர் செய்த போர்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

9. காந்தியடிகள் உப்புச் சத்தியாக்கிரகம் மேற்கொண்ட இடம் எது? குறிப்பு வரைக.

10. பண்டைத் தமிழ் தெய்வங்களின் பெயர்களைக் கூறுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) சிந்துவெளி நாகரிகத்தின் தனிச் சிறப்புகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கீழைநாடுகளுடன் தமிழர்கள் கொண்டிருக்க வணிகத் தொடர்புகளை விளக்குக.

12. (அ) சங்க கால இறைவழிபாட்டு முறைகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) பழந்தமிழரின் விழாக்களைப் பட்டியலிட்டு விளக்கம் தருக.

13. (அ) பல்லவர் காலத்து பொருளாதார நிலையைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) பல்வர்களுள் முதலாம் நரசிம்மவர்மன் பெறும் இடம் யாது?

14. (அ) சோழர்காலச் சமுதாய நிலையை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பிற்காலச் சோழர்களுள் முதலாம் இராசராசனின் தனித்தன்மைகள் யாவை?

15. (அ) ஆங்கிலேயர் ஆட்சி விளைவித்த நன்மைகள் யாவை?

(அல்லது)

(ஆ) நாகரிகம், பண்பாடு – வேறுபாடு தருக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. தமிழக வரலாற்றை அறிய உதவும் சான்றுகளைத் தொகுத்துரைக்க.

17. களப்பிரர்கள் காலம் இருண்ட காலமா? ஆராய்க.

18. பல்லவர்கள் கலைக்கு ஆற்றிய பணிகளை தொகுத்துரைக்க.

19. சோழர்காலத்தில் ஊராட்சி அமைப்புகள் எங்ஙனம் வளர்ச்சிப் பெற்றிருந்தன? சான்றுடன் விவரி.

20. இந்திய விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்கு குறித்து கட்டுரைக்க.

———————

| S–5623 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTAA1 |

## U.G. DEGREE EXAMINATION, APRIL 2025

தமிழ்

இயைபுப்பாடம் – தமிழரின் மேலாண்மைச் சிந்தனைகள்

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. மேலாண்மை குறித்து அறிஞர் ஹெய்ரிச் அவர்களின் கூற்றைச் சுருக்கமாக கூறுக.

2. மேலாண்மை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

3. Human Relationship management – தமிழில் பொருள் தருக.

4. மனித உறவுகள் மேலாண்மை – வரையறை கூறுக.

5. ஆளுமை என்னம் சொல்லின் பொருளைக் கூறுக.

6. சீராக இருத்தல் என்றால் என்ன?

7. தலைமைப் பண்பு என்றால் என்ன?

8. தலைமைப் பண்பின் வகைகளைக் கூறுக.

9. நெருக்கடி நிர்வாகம் என்றால் என்ன?

10. இடர் மேலாண்மை குறித்து எழுதுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) இலக்கியமும் மேலாண்மையும் குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) இடைக்கால இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள மேலாண்மை கருத்துக்களை எழுதுக.

12. (அ) சங்க அக இலக்கியப் பாடல்களில் மனித உறவுகள் மேலாண்மை குறித்து கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) புதுக்கவிதைகளில் மனித உறவுகள் மேலாண்மை பற்றிச் சான்றுடன் விளக்குக.

13. (அ) ஆளுமை குறித்த மேலைநாட்டு அறிஞர்களின் கருத்துக்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆளுமைப் பண்புகள் எவையேனும் இரண்டினைச் சான்றுடன் விளக்குக.

14. (அ) தலைமைப் பண்புகள் எவையேனும் இரண்டினை விளக்குக.

(அல்லது)

(ஆ) தலைமைப் பண்பு பற்றி அறிஞர்களின் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

15. (அ) இடர் மேலாண்மைகளும் எவையேனும் இரண்டினை விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) நெருக்கடியின் வரைவிலக்கணத்தை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

ஏதேனும் **மூன்றனுக்கு** மட்டும் கட்டுரை வடிவில் விடையளிக்கவும்.

16. வணிக மேலாண்மையின் வகைகளைச் சான்றுடன் விளக்குக.

17. மனித உறவுகள் மேம்பாடும் இலக்கியமும் எனும் பொருண்மையின் கட்டுரை வரைக.

18. சங்க இலக்கியங்களில் ஆளுமைப் பண்புகள் குறித்த பதிவுகளை எடுத்துரைக்க.

19. நீதி இலக்கியங்களில் தலைமைப் பண்புகள் எனும் பொருண்மையில் கட்டுரைக்க.

20. பேரிடர் மேலாண்மையின் வகைகளைச் சான்றுடன் விளக்குக.

| S–5624 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTAA2 |

**U.G. DEGREE EXAMINATION, APRIL 2025**

**தமிழ்**

**இயைபுப் பாடம் – அண்ணாவியல்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்கவும்.

1. அண்ணாவின் கவனத்தை அரசியலின் பக்கம் திருப்பியவர்கள் யார்? காரணம் யாது?

2. பார்வதி பி.ஏ நாவல் எந்த ஆண்டு எந்த இதழில் தொடர்கதையாக வந்தது?

3. அண்ணா தொடங்கிய இதழ்களைக் குறிப்பிடுக.

4. செவ்வாழை சிறுகதையின் கதைமாந்தர், பெயர்களை குறிப்பிடுக.

5. தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை என்று பாடியவர் யார்? சான்று தருக.

6. சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் என்ற நாடகத்தை தந்தைப் பெரியார் எவ்வாறு பாராட்டினார்?

7. தமிழ் நாட்டிற்குத் தமிழ்நாடு என்ற எந்த ஆண்டு யாரால் பெயர் சூட்டப்பட்டது?

8. தனிநாயகம் அடிகள் அண்ணாவைப் பார்த்து வருந்தியதற்கான காரணம் யாது?

9. அறிஞர் அண்ணாவை எம்.ஜி.ஆர் எவ்வாறு எண்ணினார்?

10. அண்ணா அரசியல் கொள்கையாகக் கொண்ட திருமூலர் வாக்கைக் குறிப்பிடுக.

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) பேரறிஞர் அண்ணா – குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) அண்ணாவின் இலக்கியப் பங்களிப்பை விவரி.

12. (அ) செங்கோடன் குழந்தைகளின் செவ்வாழைப் பழம் குறித்த மனப்பாங்கை விளக்குக.

(அல்லது)

(ஆ) பார்வதி பி.ஏ. நாவலின் கதை மாந்தர் பண்புகளை ஆராய்க.

13. (அ) தமிழர் போற்றும் திருநாள் பொங்கல் குறித்து அண்ணா உரைப்பனவற்றைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) மக்கள் கவி பாரதி என்பதை அண்ணா வழி விவரிக்க.

14. (அ) விடுதலை நாளில் அண்ணா ஆற்றிய உரையை விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) அடுக்கு மொழிப் பேச்சு அண்ணாவிற்கே உரியது என்பதைத் திறனாய்க.

15. (அ) அண்ணா அரசு அதிகாரிகளை கண்ணியத்தோடு நடத்திய விதத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) அண்ணாவின் திராவிடநாடு சிந்தனையை ஆராய்க.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் கட்டுரை வடிவில் விடையளிக்கவும்.

16. அண்ணாவின் இதழியல் பணிகுறித்து கட்டுரை வரைக.

17. செவ்வாழை சிறுகதை உணர்த்தும் வர்க்கச் சுரண்டலை விளக்கி வரைக.

18. சிவாஜி கண்ட ஐந்து ராஜ்யம் நாடகத்தினைத் திறனாய்வு செய்க.

19. தமிழ்நாட்டிற்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டி பாராளுமன்றத்தில் அண்ணா ஆற்றிய உரையைத் தொகுத்துரைக்க.

20. அண்ணா அரியணைக்குப்பின் தமிழகப் பொருளாதாரம், சமூக நிலை மாற்றம் குறித்து திறனாய்க.

| S–5625 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA1S1 |

## B.A. DEGREE EXAMINATION, APRIL 2025

### First Semester

### தமிழ்

### பேச்சுக்கலைத்திறன்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு சொல்/தொடரில் விடையளிக்க.

1. புராணப் பிரசங்கம் எனப்படுவது யாது?

2. முன்னோடி பேச்சாளர்கள் இருவரைக் குறிப்பிடுக.

3. சிறந்த சொற்பொழிவு அமைய அடிப்படைக் காரணங்கள் இரண்டினைக் கூறுக.

4. விவேகானந்தர் அமெரிக்காவில் எந்த நகரத்தில் சொற்பொழிவு ஆற்றினார்?

5. பேச்சின் தொடக்க வகைகளைக் குறிப்பிடுக.

6. பேச்சாளருக்குரிய வெளிப்பாட்டுத் திறன் எவ்வாறு அமைதல் வேண்டும்?

7. அடுக்குமொழியில் பேசுபவர் என்ற பெருமைக்குரியவர் யார்?

8. கலைஞரின் புகழ்பெற்ற பேச்சுத் திறனுக்கு இரண்டு சான்று தருக.

9. சொற்பொழிவிற்கு பயன்படுத்தப்படும் உத்தி முறையினைக் குறிப்பிடுக.

10. பேச்சுப் பயிற்சிக்குச் செய்ய வேண்டியன யாவை?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) சிறந்த பேச்சின் இலக்கணத்தைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) மேடைப் பேச்சிற்கு இலக்கிய அறிவு எங்ஙனம் உதவுகிறது?

12. (அ) இலக்கியச் சொற்பொழிவின் தன்மைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) நகைச்சுவைச் சொற்பொழிவாளர்கள் குறித்து எழுதுக.

13. (அ) மேடைப்பேச்சில் மொழியைக் கையாளும் திறன் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மேடைப்பேச்சில் அவையறிதலின் அவசியத்தை எடுத்துரைக்க.

14. (அ) அண்ணாவின் சொற்பொழிவுத் திறனை எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) சிலம்பொலியாரின் பேச்சுத்திறனைப் புலப்படுத்துக.

15. (அ) பேச்சாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவை யாவை?

(அல்லது)

(ஆ) பேச்சுத் தயாரிப்புக்குரிய குறிப்புகளை எங்ஙனம் தயார் செய்வது?

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. மேடைப் பேச்சாளருக்குரியத் தகுதிகளையும் தனித்தன்மைகளையும் ஆராய்க.

17. சொற்பொழிவின் வகைகளை விளக்கிக் கட்டுரைக்க.

18. சிறந்த சொற்பொழிவின் பண்புகளைத் தொகுத்தெழுதுக.

19. தங்களைக் கவர்ந்த மேடைப் பேச்சாளர்களின் தனித்தன்மைகள், சிறப்புகளை விவரி.

20. மேடைப்பேச்சுக்கு நினைவாற்றல் கலை இன்றியமையாதது என்பதை நிறுவுக.

**S–5626**

**Sub. Code**
**23BTA1FC**

## B.A. DEGREE EXAMINATION, APRIL 2025

### First Semester

### தமிழ்

### தமிழில் சிறார் இலக்கியம்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　$(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. சிறார் இலக்கியம் என்றால் என்ன?

2. விஷ்ணுபுரம் சரவணனின் சிறார் கதைகளை இரண்டினைக் குறிப்பிடுக.

3. ஆயிஷா நடராசனின் புகழ்பெற்ற படைப்புகளை எழுதுக.

4. குழ. கதிரேசனின் படைப்புகளைக் குறிப்பிடுக.

5. குழந்தை இலக்கியப் படைப்புகளின் பண்புகளை எழுதுக.

6. இலக்கியப் படைப்பின் உள்ளடக்கம் எவ்வாறு இருத்தல் வேண்டும்?

7. பூவண்ணனின் முதல் கவிதை எது? மையக் கருவினைக் குறிப்பிடுக.

8. நாராயணி சுப்பிரமணியன் நூலின் உள்ளடக்கத்தை எழுதுக.

9. பொன்னியின் தியாகம் நாடகக் கதை மாந்தர்கள் யாவர்?

10. ஆலிஸின் அற்புத உலகம் மூலநூலின் ஆசிரியர் யார்? படைப்புகள் குறித்து எழுதுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) சிறார் உளவியல் படைப்புகளில் எவ்விதம் வெளிப்படுகிறது?

(அல்லது)

(ஆ) சிறார் இலக்கியங்களில் கற்பனை பெறும் இடம் குறித்து விளக்குக.

12. (அ) கவிமணியின் குழந்தைப் பாடல்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) குழ. கதிரேசன் படைத்த இலக்கிய வகைமை குறித்து எழுதுக.

13. (அ) சிறார் இலக்கியப் படைபுகளின் உருவத்தை எழுதுக.

(அல்லது)

(ஆ) மொழிநடையில் சிறார் படைப்புகள் சிறந்து விளங்கவேண்டிய தேவை குறித்து எழுதுக.

14. (அ) விஞ்ஞானக் கேள்விகளில் அமைந்த கதைகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மருத்துவத்துறை கேள்விகளுக்கு விக்கிரமாதித்தன் பதில்களை எடுத்துரைக்க.

15. (அ) பாரியின் பண்புநலன் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) ஆலிஸின் அற்புத உலகம் காட்டும் சிறார்களின் வாழ்வியலை விளக்குக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் விரிவான விடையளி.

16. சிறார் இலக்கிய வகைமைகள் குறித்துக் கட்டுரைக்க.

17. சிறுவர் இலக்கியத்தில் ஆயிஷா நடராசனின் பங்களிப்பு குறித்துத் திறனாய்க.

18. சிறார் இலக்கியத்தின் உருவமும் உள்ளடக்கமும் பற்றி விவரிக்க.

19. மருத்துவத்துறை சார்ந்த கேள்விகளும் அதற்கான விடைகளும் அமைந்த விதத்தைத் திறனாய்க.

20. பொன்னியின் தியாகம் நாடகப் பாத்திரங்கள் குறித்து கட்டுரைக்க.

———————

| S–5627 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA2C1 |

## B.A. DEGREE EXAMINATION, APRIL 2025

### Second Semester

### தமிழ்

### அறஇலக்கியம்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. வாழ்க்கைத் துணையைப் பற்றி வள்ளுவர் என்ன கூறுகிறார்?

2. பழமொழி நானூறின் ஆசிரியர் பெயர் என்ன?

3. அறிவுடைய முதியோர் வைகறையில் செய்யவேண்டுபவையாக குறிப்பவை எவை?

4. செங்கோல், கொடுங்கோல் இரண்டிற்குமான வேறுபாடுகளை எழுது.

5. "சிறுபஞ்சமூலம்" – சிறுகுறிப்பு வரைக.

6. கணிமேதாவியார் எழுதிய நூலின் பெயரினை எழுது.

7. மேன்மக்கள் மேன்மக்களே என்பதற்க நல்வழி கூறும் சான்று என்ன?

8. உழவர்க்கு அழகு தருவது எது?

9. நீதிநெறிவிளக்கத்தின் ஆசிரியர் யார்?

10. அறநெறிச்சாரத்தின் முக்கிய கருத்து என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) இளமை நிலையானதல்ல என்பதை நாலடியார் எங்ஙனம் உணர்த்துகின்றது?

(அல்லது)

(ஆ) விருப்பமில்லாத ஈகை எத்தகையது என கூடலூர்க்கிழார் குறிப்பிடுகிறார்?

12. (அ) ஒழுக்கத்திற்கான காரணங்களை எழுதி விளக்கு.

(அல்லது)

(ஆ) ஆசாரக் கோவையில் நீராடுதல் குறித்து ஆசிரியர் கூறுவதை எழுது.

13. (அ) அறியாமையினால் வரும் கேடுகளை திரிகடுகத்தின் வாயிலாக எழுது.

(அல்லது)

(ஆ) ஒருவனுக்கு எமனாக அமைவதெது என சிறுபஞ்சமூலம் குறிப்பிடுகின்றது?

14. (அ) எல்லாருக்கும் பொதுவானதாக நல்வழி கூறும் கருத்துக்கள் யாவை?

(அல்லது)

(ஆ) பிராமணர்க்கு அழகு தருவது வேதமும் ஒழுக்கமும் என்பதை விளக்கு.

15. (அ) கல்வியின் அவசியத்தை குமரகுருபரர் எவ்வாறு குறிப்பிடுகிறார்?

(அல்லது)

(ஆ) நல்ல அறிவுடையவரின் தகுதிகள் யாவை?

## பகுதி இ $(3 \times 10 = 30)$

ஏதேனும் **மூன்று** வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடையளிக்கவும்.

16. நிலையாமை குறித்து நாலடியார் கூறும் கருத்துக்களை தொகுத்துரைக்க.

17. மாந்தர்க்கு இது இனிமையானது என்பதை இனியவை நாற்பதின் வழி விளக்கு.

18. மேன்மையான ஒழுக்கத்தினை அடைய நல்லாதனார் கூறுவது யாது?

19. மூதுரையில் குறிப்பிடப்படும் அறக்கருத்துக்கள் குறித்து கட்டுரை வரைக.

20. உலகநீதி புகட்டும் கருத்துக்களை தொகுத்துரைக்க.

---

| S–5628 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA2C2 |

## B.A. DEGREE EXAMINATION, APRIL 2025

### Second Semester

### தமிழ்

### தமிழ் இலக்கிய வரலாறு

## (CBCS 2023 onwards)

Time : 3 Hours | Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிருவரிகளில் விடையளிக்கவும்.

1. பத்துப்பாட்டு சிறு குறிப்பு வரைக.

2. சிலப்பதிகாரத்தில் எத்தனை காண்டங்கள் உள்ளன? அவை யாவை?

3. திருமுறை என்றால் என்ன? எத்தனை திருமுறைகள் உள்ளன?

4. பாரத காவியத்தை போர்க்காப்பியம் எனக் கூறக் காரணம் என்ன?

5. சிற்றிலக்கியங்கள் என்றால் என்ன?

6. “உலா” - சிறுகுறிப்பு வரைக.

7. H.A. கிருட்டினப்பிள்ளை எழுதிய நூலின் பெயரை எழுது?

8. “மொழிஞாயிறு” என அழைக்கப்படுபவர் யார்?

9. சிறுகதைக்கான வரையறையை எழுது?

10. தமிழின் முதல் புதினம் எது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11\. (அ) கீழ்க்கணக்கு நூல்களில் வரும் அறநூல்களைப் பற்றி எழுது.

(அல்லது)

(ஆ) மதுரைக்காஞ்சியில் வரும் நிலையாமையின் நிலைபேறு குறித்து எழுது.

12\. (அ) திருத்தொண்டர் புராணம் குறித்து எழுது.

(அல்லது)

(ஆ) சமண சமய சிறுகாப்பியங்கள் எவை? அவற்றை விளக்கு?

13\. (அ) ஏதேனும் மூன்று இலக்கண உரையாசிரியர்களைப் பற்றி எழுது.

(அல்லது)

(ஆ) பிள்ளைத்தமிழில் வரும் ஆண்பால், பெண்பால் பருவங்களை எழுதுக.

14\. (அ) புதின இலக்கியத்தின் தந்தை யார்? அவரின் பணிகளை எழுது.

(அல்லது)

(ஆ) நபிகள் நாயகத்தின் பெருமைகளாக உமறுப்புலவர் கூறுவன யாவை?

15\. (அ) சிறுகதையின் இலக்கணத்தை எழுது.

(அல்லது)

(ஆ) வரலாற்றுப் புதினங்கள் படைப்தில் சிறந்து விளங்கியவர்கள் யாவர்?

## பகுதி இ (3 × 10 = 30)

ஏதேனும் **மூன்று** வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடையளிக்கவும்.

16. இரட்டைக் காப்பியங்களின் சிறப்பினை எழுது?

17. கம்பராமாயணத்தில் பயின்றுவரும் உவமைகளை குறித்து கட்டுரை வரைக.

18. சிற்றிலக்கியங்கள் குறித்து கட்டுரை வரைக?

19. தாயுமானசுவாமி பாடல்களின் சிறப்பினை குறித்து கட்டுரை வரைக?

20. மரபுக்கவிதைகள் பாடுவதில் சிறந்தவர்களை குறித்து கட்டுரை வரைக?

| S–5629 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTAA3 |

## U.G. DEGREE EXAMINATION, APRIL 2025

### தமிழ்

### இயைபுப்பாடம் – கலைஞரின் தமிழ்ப் பணியும், சமூகப் பணியும்

### (CBCS 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்கவும்.

1. கருணாநிதி அவர்களுக்கு கலைஞர் என்ற பட்டம் கொடுத்தவர் யார்?

2. கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் பெற்றோர்கள் யாவர்?

3. கலைஞரின் வரலாற்றுப் புனைவுகள் யாவை?

4. சங்கிலிச்சாமியார் பெயர்க் காரணம் தருக.

5. பொன்னர் சங்கர் கதை யாருடைய வரலாற்றைக் கூறுகிறது?

6. மந்திரிகுமாரி கதை எதைத் தழுவி எழுதப்பட்டுள்ளது?

7. கவிஞர் கலாப்ரியா - சிறு குறிப்பு வரைக.

8. முதல் இந்திய எதிர்ப்பு போராட்டம் எப்பொழுது நடைபெற்றது?

9. தமிழ்நாட்டில் மொழிப்போர் தியாகிகள் தினம் எப்பொழுது கொண்டாடப்படுகிறது?

10. கலப்புத் திருமணம் திட்டம் என்றால் என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) கலைஞர் அவர்களின் இளைஞர் அமைப்புச் செயல்பாடுகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) மு. கருணாநிதியின் நாடகங்களைப் பட்டியலிடுக.

12. (அ) சங்கிலிச்சாமியின் அருளைப் பெற்ற பக்தர்கள் கூறியதை விளக்குக.

(அல்லது)

(ஆ) நல்லத்தங்காள் கண்ட கனவுகள் பற்றி விவரி.

13. (அ) தென்னிந்தியாவின் சமகால வரலாற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) சட்டமன்ற நாயகர் கருணாநிதி என்பதை நிறுவுக.

14. (அ) இந்தி எதிர்ப்பு மாநாடு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) இரு மொழித் திட்டம் குறித்து விளக்குக.

15. (அ) கலைஞரின் இலவச கல்வி திட்டம் குறித்து விவரி.

(அல்லது)

(ஆ) கலைஞர் தமிழ் மொழிக்கு கொண்டு வந்த திட்டங்கள் குறித்து விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

ஏதேனும் **மூன்று** வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடையளிக்கவும்.

16. கலைஞரின் அரசியல் பயணங்களை விளக்குக.

17. சங்கிலிச்சாமியின் அறையில் இருந்த கடிதத்தில் எழுதப்பட்டிருந்ததை விவரி.

18. கலைஞரின் திரைப்படங்களை விளக்குக.

19. கலைஞரின் மொழிப் போராட்டங்கள் குறித்து விளக்குக.

20. கலைஞரின் சமூக நலத் திட்டங்களினால் ஏற்பட்ட நன்மைகளை விளக்குக.

———————

**S–5630**

**Sub. Code**
**23BTAA4**

## U.G. DEGREE EXAMINATION, APRIL 2025

### தமிழ்

### இயைபுப்பாடம் – சுவடியியல்

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி.

1. பனை ஓலைகள் – குறிப்பு வரைக.

2. சுவடிகளில் குறியீடுகள், கூட்டெழுத்துக்கள் பின்பற்றும் முறைகளைச் சுட்டுக.

3. சுவடி எழுதும் முறைகள் யாவை?

4. சுவடிகளில் தமிழ் எண்கள் பின்பற்றப்படுவனவற்றைத் தருக.

5. சுவடியில் குறியீட்டுமுறையை எவ்வாறு பின்பற்றியுள்ளவர்?

6. சுவடி அமைப்பு முறைகள் யாவை?

7. சுவடிக்காப்பகங்கள் - குறிப்பு வரைக.

8. சுவடிக் காப்பகத்தால் ஏற்படும் நன்மைகளைக் குறிப்பிடுக.

9. சுவடிகள் அந்தலுக்கான காரணங்கள் யாவை?

10. சுவடிகளை இயற்கை முறையில் பாதுகாத்தல் பற்றிக் தறுக.

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) சுவடி தயாரிப்பு முறைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) சுவடிகளில் ஆவணங்கள் பதிவு செய்யும் தன்மையை எழுதுக.

12. (அ) சுவடி சேகரிப்புப்பணிகள் யாவை?

(அல்லது)

(ஆ) சுவடி விளக்க அட்டவணை குறித்து விளக்குக.

13. (அ) சுவடியின் அமைப்பு முறை பற்றி விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) சுவடியில் மூலப்பாடத் திறனாய்வினைப் பின்பற்றும் முறைகளை விளக்குக.

14. (அ) சுவடியைப் பாதுகாப்பதில் சமய நிறுவனங்களின் பங்கு பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) சுவடியைப் பாதுகாப்பதில் பொது நிறுவனங்கள் எங்ஙனம் துணை செய்கின்றன?

15. (அ) நவீன முறையில் சுவடிகளைப் பாதுகாத்தல் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) சுவடிகளைப் பாதுகாப்பதால் ஏற்படும் நன்மைகளை விளக்கி வரைக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் விரிவான விடையளி.

16. சுவடிகளின் தொகுப்பு வரலாற்றினை விவரி.

17. சுவடிகளை நூலாக்குதலால் ஏற்படும் நன்மைகளை எடுத்துரைக்க.

18. சுவடிப்பதிப்பில் யாப்பின் அவசியம் குறித்து கட்டுரைக்க.

19. சுவடியைப் பாதிகாப்பதில் கல்வி நிறுவனங்களின் பங்களிப்பு குறித்துத் திறனாய்க.

20. சுவடிகளைப் பாதுகாத்தல் குறித்துக் கட்டுரைக்க.

| S–5631 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTAA5 |

## U.G. DEGREE EXAMINATION, APRIL 2025

### தமிழ்

### இயைபுப்பாடம் – நாடகவியல்

### (CBCS 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு சொல்/தொடரில் விடையளிக்க.

1. தமிழ் நாடகத் தந்தை என அழைக்கப்பெறுபவர் யார்?

2. நாடகத்திற்கு இலக்கணம் வகுத்த நூல்களைக் கூறுக.

3. மறைமலை அடிகள் எழுதிய நாடகம் இரண்டினைக் குறிப்பிடுக.

4. நாடகத்தமிழ் என்னும் நூலை எழுதியவர் யார்?

5. எழினி – பொருள் தருக.

6. வென்றிக்கூத்து என்றால் என்ன?

7. குடும்பச் சார்பு சமூக நாடகம் என்றால் என்ன?

8. வேத்தியல் என்றால் என்ன?

9. நாடகப் பயிற்சிக்கு முன் செய்ய வேண்டுவன யாவை?

10. நாடகம் நடிப்பவர்க்குரிய தகுதிகள் இரண்டினை எழுதுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) நாடகவியல் - குறிப்பு எழுதுக.

(அல்லது)

(ஆ) சங்க இலக்கியங்களில் காணப்படும் நாடகக் குறிப்புகளை விளக்குக.

12. (அ) பம்பல் சம்பந்தனாரின் நாடகப் பணியை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தற்கால நாடக அமைப்பின் வளர்ச்சி நிலையை எடுத்துரைக்க.

13. (அ) நாடக மேடை அமைப்பு முறையைக் கூறுக.

(அல்லது)

(ஆ) எழினியின் வகைகளை விளக்குக.

14. (அ) மொழிபெயர்ப்பு நாடகங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மேடை நாடகம் சிறப்புற அமைவதற்குரிய இன்றியமையாதக் கூறுகளை விளக்குக.

15. (அ) நாடக ஆசிரியராக உருவாகுவதற்குரிய அடிப்படைத் தகுதிகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) நாடகப் பயிற்சினை மேற்கொள்வதற்கான வழிமுறைகளைக் குறிப்பிடுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து கட்டுரை ஒன்றை வரைக.

17. தமிழ் நாடக ஆசிரியர்களின் வாழ்வியலை வெளிக்கொணர்க.

18. நாடக வகைகளைப் பட்டியலிட்டு பகுத்தாய்க.

19. தற்கால தொலைக்காட்சி நாடகத்தின் போக்குகளை ஆராய்க.

20. சமூகச்சிந்தனையோடு கூடிய நாடகம் ஒன்றினை எழுதுக.

———————

| S–5632 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA2S1 |

## B.A. DEGREE EXAMINATION, APRIL 2025

### Second Semester

### தமிழ்

### ஊடகவியல்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிருவரிகளில் விடையளிக்கவும்.

1. ஊடகங்களின் வகைகள் நான்கினை எழுது.

2. ஊடகங்களின் பங்கு – குறிப்பு எழுது.

3. தமிழ்நாட்டில் அச்சு இயந்திரங்கள் எந்த நூற்றாண்டில் வெளிவந்தன?

4. "சென்னைக் கல்விச்சங்கம்" எந்த ஆண்டு அமைக்கப்பட்டது?

5. "வானொலி" - குறிப்பு வரைக.

6. தொலைக்காட்சியில் கல்வி ஒளிப்பரப்பு எந்த ஆண்டு துவங்கப்பட்டது?

7. இந்தியாவில் பேசும்படம் வந்த ஆண்டு எது?

8. "கலைத்திரைப்படம்" - குறிப்பு வரைக.

9. இணையத்தில் வெளிவரும் மூன்று அச்சு இதழ்களின் பெயரினை எழுது.

10. தமிழ் இணைக்கல்விக்கழகம் தோன்றிய ஆண்டு என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) மின்னணுவழி ஊடகம் குறித்து எழுது.

(அல்லது)

(ஆ) மரபு சார்ந்த ஊடகத்தின் தனித்தன்மைகள் யாவை?

12. (அ) நாளிதழ்கள் குறித்து எடுத்துக்காட்டுடன் எழுது.

(அல்லது)

(ஆ) இதழியல் பற்றியக் கொள்கைகளை எழுது.

13. (அ) வானொலியின் ஒலிபரப்பு முறைகள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) தொலைக்காட்சியின் செல்வாக்கு எவ்வாறு அமைந்துள்ளது?

14. (அ) தொழில்நுட்ப வல்லுநர்களின் வளர்ச்சி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) இன்றையத் திரைப்படங்கள் இளைஞர்களை சிந்திக்க வைக்கின்றனவா கூறு?

15. (அ) இணையத்தினால் மக்களுக்கு ஏற்படும் நன்மைகளை எழுது.

(அல்லது)

(ஆ) உணர்ச்சிகளால் மக்களிடம் ஏற்படும் மாறுபாட்டை எழுது.

## பகுதி இ $(3 \times 10 = 30)$

ஏதேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடையளிக்கவும்.

16. ஊடகங்களின் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள் குறித்து கட்டுரை வரைக.

17. தமிழகத்தில் அச்சு ஊடகங்களின் தோற்றம் வளர்ச்சி குறித்து கட்டுரை வரைக.

18. வானொலி நிகழ்ச்சிகள் குறித்து கட்டுரை வரைக.

19. சிறந்த கலைஞர்கள் பற்றி கட்டுரை எழுதுக.

20. இணையத்தில் தமிழ் மின் இதழ்களின் தோற்றம் அதன் சிறப்புகள் குறித்து எழுதுக.

———————

| S–5633 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA2S2 |

# B.A. DEGREE EXAMINATION, APRIL 2025

## Second Semester

## தமிழ்

## அறிவியல் தமிழ்

## (CBCS 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

### பகுதி அ $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு தொடரில் விடையளி.

1. அறிவியல் தமிழ் விளக்கம் தருக.

2. அறிவியல் நூல்களைத் தமிழாக்கம் செய்வதில் சிறந்து விளங்கிய அறிஞர் யார்?

3. தமிழல் தோன்றிய முதல் அறிவியல் இதழ் எது?

4. அறிவியல் இதழான கலைக்கதிர் வெளிவந்த ஆண்டு யாது?

5. குறியீடுகள், சமன்பாடுகள் ஆகியவற்றைத் தமிழில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?

6. அறிவியல் களஞ்சியம் என்றால் என்ன? எ.கா. தருக.

7. தமிழ் மின்புல ஆய்விதழைக் குறிப்பிடுக.

8. அறிவியல் தமிழை வளர்க்கும் இணையதளங்கள் யாவை?

9. தமிழ்நாடு தமிழக அறிவியல் பேரவை தொடங்கப்பட்ட ஆண்டு யாது?

10. அறிவியல் மன்றத்தில் இடம்பெறுவோர் யாவர்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) சுவடிகள்வழி அறியலாகும் அறிவியல் செய்திகளை ஆய்ந்துரைக்க.

(அல்லது)

(ஆ) பல்துறை சார்ந்த அறிவியல் தமிழ் நூற்களைக் குறிப்பிடுக.

12. (அ) அறிவியல் தமிழ் ஆய்வுகள், களஞ்சிகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) சிறுவர் இதழ்கள் வெளிபடுத்தும் அறிவியல் செய்திகளைக் குறிப்பிடுக.

13. (அ) தமிழில் அறிவியல் கலைச் சொல்லாக்க முயற்சிகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) அறிவியல் கலைச் சொல்லாக்க மொழிபெயர்ப்பு முறைகள் யாவை? விளக்குக.

14. (அ) மருத்துவத்துறையில் தகவல் தொழில் நுட்பத்தின் பங்கு குறித்து எழுது.

(அல்லது)

(ஆ) தமிழின் அறிவியல் வளர்ச்சியில் குறுந்தகடுகள் மற்றும், ஒளிநாடாக்களின் பங்களிப்பினை விளக்குக.

15. (அ) தமிழில் அறிவியல் மன்றங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சுதேசி அறிவியல் இயக்கம் குறித்து எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடை தருக.

16. அறிவியல் தமிழின் தோற்றம் வளர்ச்சி குறித்து விளக்குக.

17. தமிழில் அறிவியல் இதழின் வகைகள் குறித்துக் கட்டுரை எழுதுக.

18. அறிவியல் சொல்லாக்க நெறிகள் குறித்து விளக்கிக் கட்டுரை எழுதுக.

19. அறிவியல் வளர்ச்சியில் தகவல் தொழில் நுட்பத்தின் பங்கினை விவரிக்க.

20. பகுத்தறிவு இயக்கத்தின் அறிவியல் கண்ணோட்டம் குறித்து ஆராய்க.

———————

| S–5634 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA3C1 |

## B.A. DEGREE EXAMINATION, APRIL 2025

### Third Semester

தமிழ்

காப்பியங்கள்

(CBCS 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு தொடரில் விடையளி.

1. கனாத்திறம் உரைத்த காதையில் இடம்பெறும் மகளிர் யாவர்?

2. உதயகுமாரன் சூளுரைத்த தெய்வத்தின் பெயர் என்ன?

3. சீவகசிந்தாமணி எத்தனை இலம்பகங்களைக் கொண்டது.

4. நகரச்சருக்கம்வழி மாடங்களில் தோன்றிய ஒலிகளைக் குறிப்பிடுக.

5. அனுமான் கால்களை ஊன்றும் போது அழுந்திய மலையின் பெயர் என்ன?

6. கண்ணப்ப நாயனாரின் பெற்றோர் பெயர் என்ன?

7. தேம்பாவணி பொருள் விளக்கம் தருக?

8. சீறாபுராணத்தின் ஆசிரியர் யார்?

9. இராவண காவியம் குறிப்பு எழுதுக.

10. வீராயியின் தந்தை பெயர் என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கண்ணகி கண்ட கனவு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதையில் வெளிப்படும் இயற்கை வருணனைகளை விளக்குக.

12. (அ) சீவகன் துயிலெழுந்த காட்சியை விவரிக்க.

(அல்லது)

(ஆ) பயாபதி மன்னனின் சிறப்பினை எழுதுக.

13. (அ) அனுமான் வானில் பறக்கும்போது ஏற்பட்ட இடையூறுகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சிவகோசரியாரின் செயல் குறித்து விளக்குக.

14. (அ) தேம்பாவணி நாட்டுப்படலம் காட்டும் உழவுத்தொழில் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) வெப்பத்தின் மிகுதியால் சுரத்தில் மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்களை ஆசிரியர் விளக்கும் திறம் யாது?

15. (அ) பழந்தமிழர் தமிழைப் போற்றி வளர்த்த தன்மையினைப் புலவர் குழந்தை எங்ஙனம் விளக்குகிறார்?

(அல்லது)

(ஆ) வீராயி காவியம் காட்டும் ஜமின்தாரின் பண்புகளை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடை தருக.

16. கனாத்திறம் உரைத்த காதை வழி வெளிப்படும் பெண்களின் மனவுணர்வுகளை விளக்குக.

17. பூமகள் இலம்பகம் வழி அறியலாகும் சீவகனின் வீரச்சிறப்பு மற்றும் பண்புகளை விளக்கியுரைக்க.

18. அனுமானின் வீரச்சிறப்பினை கடல்தாவு படலம் வழி விளக்குக.

19. யூதேயா நாட்டு இயற்கை அழகினைத் தேம்பாவணி நாட்டுப்படலம்வழி விளக்குக.

20. ஏழை பெண்களின் அவலநிலையை வீராயி காவியம்வழி நிறுவுக.

---

**S–5635**

| Sub. Code |
| --- |
| 23BTA3C2 |

## B.A. DEGREE EXAMINATION, APRIL 2025

### Third Semester

### தமிழ்

### நன்னூல் – எழுத்து

### (CBCS – 2023 on wards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு தொடரில் விடையளி.

1. சூத்திர வகைகள் யாவை?

2. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் யாவை?

3. தமிழுக்குரிய சிறப்பெழுத்துகள் யாவை?

4. தற்பவம் என்றால் என்ன? சான்று தருக.

5. புளி என்னும் சொல்லின் புணர்ச்சி விதியினைச் சான்றுகளுடன் குறிப்பிடுக.

6. ஊகார ஈற்றுச் சொல் எவ்வாறு புணரும்? சான்று தருக.

7. தெவ் என்னும் சொல் எவ்வாறு புணரும்?

8. ஈம் ஈற்றுச் சொல் புணர்ச்சியில் பெறும் சாரியைகளைக் குறிப்பிடுக.

9. சுட்டுப்பெயர்களின் புணர்ச்சி விதியினை தருக?

10. உருபுபுணர்சி சான்று தருக?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) நல்லாசிரியரின் இலக்கணம் தருக.

(அல்லது)

(ஆ) சார்பெழுத்துகளை விளக்குக.

12. (அ) காலம் காட்டும் விகுதிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆரியமொழி வடமொழி ஆதற்குரிய சிறப்பு விதியினைக் குறிப்பிடுக.

13. (அ) 'ஜகார' ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி விதிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'ஈகார' – ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி குறித்து விளக்கம் தருக.

14. (அ) 'லகர' ளகர' ஈற்றுத் தொழிற்பெயர் புணர்ச்சி குறித்து விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) 'மகர' ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி குறித்து விளக்கம் தருக.

15. (அ) மூவிடப் பெயர்கள் உருபுப் புணர்ச்சியில் அடையும் மாற்றங்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) சாரியை வரும் முறைகள் குறித்து விளக்குக.

## பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடை தருக.

16. எழுத்துகளின் மெய்ம்மயக்கம் குறித்து விளக்குக.

17. இடைநிலை குறித்து விளக்கியுரைக்க.

18. புணர்ச்சியின் இலக்கணம், வகைகள் மற்றும் உயிரீற்றுப் புணரியலின் சிறப்பு விதிகளில் சிலவற்றினைக் குறிப்பிடுக.

19. இடையின மெய் ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி விதியினைச் சான்றுகளுடன் விளக்குக.

20. வேற்றுமை உருபுகளின் புணர்ச்சி விதியினைச் சான்றுகளுடன் விவரி.

———————

| S–5636 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA3S1 |

## B.A. DEGREE EXAMINATION, APRIL 2025

### Third Semester

தமிழ்

மொழிபெயர்ப்பியல்

(CBCS 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்கவும்.

1. மொழிபெயர்ப்பில் அமைய வேண்டிய நெறிமுறைகள் யாவை?

2. மொழிபெயர்ப்புக்கான சிக்கல் என்றால் என்ன?

3. தமிழக அரசின் மொழிபெயர்ப்பு நூல்கள் எவை?

4. பண்டையக் கால தமிழ் மொழி பெயர்ப்பினைக் கூறும் நூல் எது?

5. மொழிபெயர்ப்பின் வகைகள் யாவை?

6. எந்திர மொழிபெயர்ப்பு என்றால் என்ன?

7. மூல மொழி என்றால் என்ன?

8. மரபுச் சொற்கள் என்றால் என்ன?

9. ‘சிலேடை’ என்றால் என்ன?

10. ‘சித்திரகவி’ என்றால் என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) மொழிபெயர்ப்பின் நோக்கம் குறித்து விவரி.

(அல்லது)

(ஆ) சாகித்ய அகாதமி குறித்து எழுதுக.

12. (அ) விரிவான மொழிபெயர்ப்பு பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) தகவல் மொழிபெயர்ப்பு குறித்து ஆராய்க.

13. (அ) மேலை நாட்டின் மொழிபெயர்ப்பு வளர்ச்சியினை விவரி.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்பில் தொல்காப்பியம் குறித்து ஆராய்க.

14. (அ) மொழிபெயர்ப்பு வகைகளை வளர்மதி எவ்வாறு வகைப்படுத்துகிறார்?

(அல்லது)

(ஆ) மணவை முஸ்தபாவின் மொழிபெயர்ப்பு வகைகளை விவரி?

15. (அ) சட்டத்துறை மொழிபெயர்ப்பினை விவரி.

(அல்லது)

(ஆ) 'நீரோட்டகம்' கலைச்சொற்கள் பற்றி விவரி.

## பகுதி இ (3 × 10 = 30)

ஏதேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடையளிக்கவும்.

16. மொழிபெயர்ப்பின் வகைகளைச் சான்றுடன் விவரி.

17. தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பின் வளர்ச்சியை விளக்குக.

18. சண்முக வேலாயுதத்தின் மொழிபெயர்ப்பு வகைகளை விவரி.

19. மொழிபெயர்ப்பின் போது எதிர்கொள்ளும் சிக்கல்களை எடுத்துரைக்க.

20. உறவுமுறைச் சொற்கள் குறித்து ஆராய்க.

———————

| S–5637 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA3S2 |

# B.A. DEGREE EXAMINATION, APRIL 2025

## Third Semester

## தமிழ்

## சுற்றுலாவியல்

## (CBCS 2023 onwards)

Time : 3 Hours　　　　　　　　　　Maximum : 75 Marks

### பகுதி அ　　　　(10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. சுற்றுலாப் பயணி - குறிப்பு வரைக.

2. உள்நாட்டுப் பயணி என்பவர் யார்?

3. உலகின் முதல் சுற்றுலா முகவர் யார்?

4. இந்தியாவின் பழம் நாகரீகத்தைக் குறிக்கும் இரண்டு நகரங்களை எழுது?

5. சுற்றுலாவின் இரண்டு வகைகளை எழுது?

6. குழந்தைகளிடம் குழுஒற்றுமையை எவ்வாறு வளர்க்க வேண்டும்?

7. தஞ்சைப் பெரிய கோவிலை கட்டியவர் யார்?

8. "சித்தன்னவாசல்" - சிறுகுறிப்பு வரைக.

9. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?

10. "தூண்பாறை" - சிறுகுறிப்பு வரைக?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) சுற்றுலா வளர்வதற்கான காரணங்களை எழுது?

(அல்லது)

(ஆ) குழுச் சுற்றுலாவின் சிறப்புகள் யாவை?

12. (அ) சுற்றுலாப்பயணிகள் நீண்ட பயணங்களை மேற்கொள்வதன் அவசியம் யாது?

(அல்லது)

(ஆ) "யுவான்சுவாங்" - ன் பயண அனுபவக் குறிப்புகளை எழுதுக.

13. (அ) சுற்றுலா தொடர்பான கொள்கைகள் யாவை?

(அல்லது)

(ஆ) சுற்றுலா வழிகாட்டிகளின் பண்புகளை எழுது.

14. (அ) தமிழகத்தில் உள்ள வரலாற்றுச் சின்னங்கள் இரண்டு பற்றி எழுது?

(அல்லது)

(ஆ) ஆவுடையார் கோயிலின் சிறப்பினை எழுது?

15. (அ) தமிழகத்தை "கோயில் நாடு" எனக் குறிப்பிடக் காரணம் என்ன?

(அல்லது)

(ஆ) சரணாலயங்களில் விலங்குகளைக் காண செல்லும் போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் யாவை?

## பகுதி இ

(3 × 10 = 30)

ஏதேனும் **மூன்று** வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடையளிக்கவும்.

16. சுற்றுலாத் துறையில் உள்ள தடைகளை எழுதி விளக்குக.

17. இந்தியாவில் சுற்றுலா வளர்ச்சி அடைவதற்கான காரணங்களை எழுதி கட்டுரையாக்குக.

18. சுற்றுலா செல்வதால் ஏற்படும் பயன்களை எழுதுக.

19. மாமல்லபுரத்தின் சிறப்பினை எழுதுக.

20. தமிழக சுற்றுலாத்துறையடைந்த வளர்ச்சியைக் கூறி அதன் பயன்களை எழுது?

| S–5638 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA4C1 |

## B.A. DEGREE EXAMINATION, APRIL 2025

### Fourth Semester

### தமிழ்

### பக்தி இலக்கியம்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் **ஓரிரு** வரிகளில் விடையளிக்கவும்.

1. திருஞானசம்பந்தர் - குறிப்பு வரைக.

2. ஐந்தாம் திருமுறை சிறுகுறிப்பு வரைக.

3. ஆண்டாள் - சிறுகுறிப்பு வரைக.

4. திருவல்லிக்கேணி - குறித்து எழுதுக.

5. எச். ஏ. கிருட்டினப்பிள்ளை குறிப்பு வரைக.

6. றகுமான் கண்ணியில் இடம்பெறும் ஒரு கண்ணியை எழுதுக.

7. ஊசல் என்றால் என்ன?

8. கம்பர் குறித்து நீ அறிவன யாவை?

9. தேவமாதா அந்தாதி - குறித்து எழுதுக.

10. சீதக்காதி - குறிப்பு வரைக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடையளிக்கவும்.

11. (அ) மாசில் வீணையும் எனத் தொடங்கும் பாடல் குறித்து கருத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கோளறு பதிக கருத்தினை தொகுத்துரைக்க.

12. (அ) ஆண்டாள் நாச்சியார் திருமொழியில் கண்ணனை அடைய ஆர்வம் காட்டியது பற்றி எழுது.

(அல்லது)

(ஆ) "வாளால் அறுத்துச் சுடினும்" என தொடங்கும் குலசேகர ஆழ்வார் பாடலை எழுது.

13. (அ) றகுமானின் பெருமைகளாக குணங்குடியார் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) நும் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள விசுவாசக் காட்சியின் வர்ணனையை எழுது.

14. (அ) திருமாலின் சிறப்புகளை கம்பர் எங்ஙனம் எடுத்துரைக்கின்றார்?

(அல்லது)

(ஆ) பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் வைணவ இலக்கிய வளர்ச்சிக்கு என்னென்ன செய்துள்ளார்?

15. (அ) நொண்டி நாடகத்தின் கதைக்கரு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தேவமாதா அந்தாதியில் அன்னையின் அருள்பெற பக்தன் வேண்டுவன யாவை?

## பகுதி இ  (3 × 10 = 30)

ஏதேனும் **மூன்று** வினாக்களுக்கு **கட்டுரை** வடிவில் விடையளிக்கவும்.

16. பிடித்தப்பத்தில் மாணிக்கவாசகர் சிவனை சிக்கெனப் பிடிக்க காரணம் என்ன?

17. திருவல்லிக்கேணியில் பெருமாளின் சிறப்புகளாக திருமங்கையாழ்வார் பாடுவன யாவை விவரி?

18. இரட்சண்ய மனோகரம் வாயிலாக நீ அறியும் விசுவாசக்காட்சி பற்றி கட்டுரை வரைக.

19. சடகோபர் அந்தாதி மூலமாக அறியாம் திருமாலின் சிறப்புகளை விவரி.

20. தேவமாதா அந்தாதியில் மாதாவின் புகழ் எங்ஙனம் பரவச் செய்யப்படுகிறது விளக்கு.

| S–5639 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA4C2 |

## B.A. DEGREE EXAMINATION, APRIL 2025

### Fourth Semester

### தமிழ்

### நன்னூல் – சொல்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு தொடரில் விடையளி.

1. சினையால் பெயர் பெற்ற ஆண்பால் பெயர்களைக் குறிப்பிடுக.

2. பால் பகா அஃறிணைப் பெயர் விளக்கம் தருக.

3. குறிப்பு வினை என்றால் என்ன? சான்று தருக.

4. முற்றெச்சம் என்றால் என்ன? சான்று தருக.

5. அறுவகை வினாக்கள் யாவை?

6. மரபு வழாநிலை என்றால் என்ன?

7. இடைச்சொற்கள் எவ்விடங்களில் எல்லாம் வரும்?

8. தில் என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் யாவை?

9. ஓரறிவு உயிர்களைக் குறிப்பிடுக.

10. கடி என்னும் உரிச்சொல் தரும் பொருள்கள் யாவை?

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பெயர்ச்சொல்லின் பொது இலக்கணம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தொழிற்பெயர், வினையாலணையும் பெயர் விளக்குக.

12. (அ) செய்வினை, செயப்பாட்டு வினை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஏவல்வினைக்கும் வியங்கோள் வினைக்குமுரிய வேறுபாட்டினை எழுதுக.

13. (அ) தொகாநிலைத் தொடர்கள் விளக்குக.

(அல்லது)

(ஆ) ஏழுவகை வழுக்கள் யாவை?

14. (அ) ஏகார, ஓகார இடைச்சொற்களின் பொருள்களைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) முன்னிலை அசைச்சொற்கள் குறித்து ஏழுதுக.

15. (அ) உரிச்சொல்லின் இலக்கணத்தை எழுதுக.

(அல்லது)

(ஆ) ஒரு பொருள் பல உரிச்சொற்களைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஆகுபெயர் மற்றும் அதன் வகைகள் குறித்து எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

17. வினையெச்சம் இலக்கணம் மற்றும் வகைகளைச் சான்றுகளுடன் விவரிக்க.

18. வினா மற்றும் விடைகளின் வகைகளை விளக்கி எழுதுக.

19. இடைச் சொல்லின் இலக்கணத்தைச் சான்றுகளுடன் விளக்குக.

20. உயிர் மற்றும் உயிரல்லாப் பொருள்களின் பண்புகளை விவரிக்க.

———————

| S–5640 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA4S1 |

# B.A. DEGREE EXAMINATION, APRIL 2025.

## Fourth Semester

## தமிழ்

## நூலகவியல்

## (CBCS 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்கவும்

1. நூல் என்பதன் பொருள் என்ன?

2. நூலகம் அமைத்தலின் இரு பிரிவுகள் யாவை?

3. நூலக ஆட்சி முறை என்றால் என்ன?

4. ஆவணப் பாதுகாப்பு என்றால் என்ன?

5. பகுப்பு வரிசை ஒழுங்கு முறை என்றால் என்ன?

6. குறியீடுகளின் வகைகள் யாவை?

7. நோக்கீட்டு நூல் - பொருள் தருக.

8. மொழிபெயர்ப்பு பணி என்றால் என்ன?

9. ஆண்டறிக்கை - சிறு குறிப்பு வரைக.

10. டிஜிட்டல் நூலகத்தின் அடிப்படைகள் யாவை?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்

11. (அ) நூலின் தரங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) நூலக இட அமைப்பு பற்றி விளக்குக.

12. (அ) நிலையான விற்பனையாளர்கள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) நூலகத்தின் சமூகப் பயன் குறித்து விவரிக்க.

13. (அ) குயி தசாம்சா பகுப்பு முறையை விளக்கு.

(அல்லது)

(ஆ) நூற்பட்டியின் வகைகளை விவரிக்க.

14. (அ) நோக்கீட்டுப் பணியின் தன்மைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) நூலகரின் பொறுப்புகளை விவரிக்க.

15. (அ) நூலகத்தின் மொழிபெயர்ப்பு பங்கினை விவரிக்க.

(அல்லது)

(ஆ) மின்னணு அஞ்சலின் நன்மைகளை எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

ஏதேனும் **மூன்று** வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடையளிக்கவும்

16. நூலகத்தின் தோற்றம் வளர்ச்சி குறித்து கட்டுரை வரைக.

17. 'காலம் முறை' இதழ்கள் குறித்து விளக்குக.

18. நூல் வகைப்படுத்தும் முறைகளை தொகுத்துரைக்க.

19. நூல் இருப்பு சரிபார்த்தல் பற்றி விளக்குக.

20. வரவு செலவு திட்டத்தில் கவனிக்க வேண்டிய முறைகளை விளக்குக.

---

| S–5641 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA4S2 |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2025.**

**Fourth Semester**

**தமிழ்**

**அகராதியியல்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்கவும்

1. சொல்லாக்கம் என்றால் என்ன?

2. நிலைபேறாக்கம் என்றால் என்ன?

3. அகராதியியலின் தந்தை யார்?

4. ஆட்சிச் சொல்லகராதிகளில் காணப்படும் மொழிமாற்றங்கள் யாவை?

5. தமிழ்ச் சொல்லகராதி வெளிவந்த ஆண்டு யாது?

6. நட்சத்திரக் குறி - விளக்குக.

7. உறவுமுறைச் சொற்களின் பிரிவுகள் யாவை?

8. மாமா என்னும் சொல்லின் உறவல்லாப் பொருளைச் சான்றுடன் தருக.

9. கலைச்சொல் அகராதிகளின் பெயர்களைத் தருக.

10. தமிழில் வழங்கும் கலைச்சொற்கள் நான்கினை எழுதுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) சொல்லாக்கத்தின் தரப்படுத்தலின் தேவை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சொல்லாக்க முறைமைகளை விளக்குக.

12. (அ) அகராதிகளின் தேவை மற்றும் பயன் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) அகராதிகளின் வளர்ச்சி நிலையினைச் சுட்டி எழுதுக.

13. (அ) தமிழ் ஒரு மொழி அகராதிகளின் தலைச்சொல் அமைப்பு குறித்து விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) தருக்கவியல் விளக்கம் சான்று காட்டி விளக்குக.

14. (அ) உறவுமுறைச் சொற்களின் தனிதன்மைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) உறவுமுறைச் சொற்களின் அமைப்பினைக் குறிப்பிடுக.

15. (அ) தமிழில் கலைச்சொற்களின் தேவைக்கான காரணங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கலைச்சொற்களின் பயன்கள் குறித்து எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடை தருக.

16. சொல்லாக்க உத்திகளை விளக்கி எழுதுக.

17. அகராதியின் வகைகள் குறித்து விளக்கியுரைக்க.

18. தமிழ் ஒருமொழி அகராதிகளின் வளர்ச்சிப் போக்குகள் குறித்து ஆய்க.

19. உறவு முறைச் சொற்கள் பொருள் வெளிபடுத்தும் தன்மை குறித்து ஆய்ந்துரைக்க.

20. கலைச்சொற்களின் தன்மைகள், பதிவுகள், பொருள் விளக்கம் குறித்து ஆய்க.

———————